
# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183.



# ஆண்டுமலர்

# 2015 - 2016

Scanned with CamScanner

# மலர்க்குழு

முனைவர். **எஸ். ராஜேந்திரன்** எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்., பிஎச்.டி.,
முதல்வர்

முனைவர். **வெ. மனோகரன்** எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பிஎச்.டி.,
(கல்வியியல் உதவிப்பேராசிரியர்)

திருமதி. **ஈ.சரண்யா** எம்.ஏ., (பி.எட். முதலாண்டு) தமிழ்த்துறை
(ஆண்டு மலர்ச் செயலர்)

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் – 638 183.

## நாமக்கல் மாவட்டம்.

## ஆண்டறிக்கை 2015 - 2016

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே/ பேராசிரியப் பெருமக்களே/ அலுவலக அன்பர்களே/ இனிய மாணவச் செல்வங்களே/ உங்கள் அனைவரையும் இக் கல்லூரியின் 61வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று, சாதனைகள் நிறைந்த இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரியின் வரலாறு**

இக்கல்லூரி 1955-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசிரியர் திரு.எஸ்.ஐசக், எம்.ஏ,எல்.டி, அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்த இக்கல்லூரி 1972-ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக் கல்லூரியில் 1959-ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974-ஆம் ஆண்டு எம்.எட் பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1982-ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாக இருந்த எம்.எட்முதுநிலை பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண்.*G.O M.S.No.543 Dt. 16.04.1990* ஆணையின்படி நமது கல்லூரி *CTE (College of Teacher Education)* அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டு முதல் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

**கல்லூரி மாணவர் சேர்க்கை**

மாநில அளவில் விண்ணப்பித்தோரின் தரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2008-09ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் பி.எட். சேர்க்கை கலந்தாய்வு முறையில் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியில் பி.எட். முதலாம் ஆண்டு படிப்பதற்காக 100 மாணவ மாணவியர்களுக்கு இக்கல்வி ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை குழுவில் முதல்வர் தலைமையில் பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி நூலகர் செயல்பட்டனர்.

இவ்வாண்டு கலந்தாய்வு சென்னை லேடி வெலிங்டன் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது. கலந்தாய்வில் தேர்வான மாணவர்கள் 29-09-2015 முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். கல்லூரி வகுப்புகள் 01.10.2015 முதல் துவக்கப்பட்டன. 2008-09ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்தில் *(TNTEU)* இணைவு பெற்று செயல்பட்டு வருகிறது.

மேலும் இக் கல்லூரி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் *(NCTE,SRC,Bangalore)* அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய அங்கீகாரக்குழு *NAAC* குழுவினரால் ஆய்வு செய்யபட்டு *"B"* தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

சென்ற கல்வியாண்டில் இக்கல்லூரி கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தது. இக்கல்வியாண்டிலிருந்து தருமபுரி கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



Scanned with CamScanner

கல்லூரிப் பேரவை துவக்கவிழா

61வது கல்லூரிப் பேரவை மற்றும் அனைத்து மன்றங்களின் துவக்க விழா 21-11-2015அன்று பொறுப்பு முதல்வர் முனைவர் திருமதி வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமையேற்க, குமாரபாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.மு.சித்தையன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற இனிதே நடைபெற்றது.

உற்றுநோக்கல் பயிற்சி

இக்கல்வியாண்டில் பி.எட் முதலாமாண்டு பயிற்சி மாணவ, மாணவியர்கள் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள பல்வேறு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 14-12-2015 முதல் 19-01-2015 முடிய நான்கு வாரங்கள் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உற்றுநோக்கல் பயிற்சியை மேற்கொண்டனர்.

பதவி உயர்வு மற்றும் பணியிட மாற்றம்

இக்கல்லூரியில் முதல்வராக பணியாற்றிய திரு.சி.பெரியசாமி அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் கிருஷ்ணகிரி அரசு கலைக்கல்லூரிக்கு பதவி உயர்வு பெற்று சென்றார். 05-08-2015 முதல் 15-12-2015 வரை முனைவர் திருமதி.வெ.கலைச்செல்வி அவர்கள் முதல்வர் பொறுப்பு வகித்தார். திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி வேதியியல் துறையின் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக இருந்த முனைவர் திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் பதவி உயர்வு பெற்று இக்கல்லூரியில் 16-12-2015இல் முதல்வராக பணியேற்றுக் கொண்டார். சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்திலிருந்து பணியிட மாற்றம் பெற்று முனைவர் திரு.வெ.மனோகரன் (தமிழ்) அவர்கள் இக்கல்லூரியில் 02-11-2015 முதல் கல்வியியல் உதவிப் பேராசிரியராக் பணிபுரிந்து வருகிறார்.

இக்கல்லூரியில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த திருமதி ஐ.பத்மபிரியா அவர்கள் 13-02-2016இல் நிதியாளராக பதவி உயர்வு பெற்று உடுமைலப்பேட்டை அரசு கலைக்கல்லூரிக்கு சென்றுள்ளார். வேப்பந்தட்டை அரசு கலைக்கல்லூரியில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த திரு.ரா.முரளிதரன் அவர்கள் இக்கல்லூரிக்கு பணியிட மாற்றம் பெற்று 07-03-2016இல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். கோவை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வந்த திருமதி சே.சகிலா அவர்கள் உதவியாளராக பதவி உயர்வு பெற்று இக்கல்லூரியில் 04-01-2016இல் பணியில் சேர்ந்து பின்னர் அதே இணை இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றுப்பணிசெய்ய ஆணை பெற்று சென்றுள்ளார். இக்கல்லூரியில் ஆய்வக உதவியாளராக பணிசெய்த திரு.ஆர்.ராஜேந்திரன் அவர்கள் பணியிட மாற்றம் பெற்று கரூர் அரசு கலைக்கல்லூரிக்கு 18-12-2015 இல் சென்றுள்ளார்.

இக்கல்வியாண்டில் நான்கு ‡துறைகளுக்கு கௌரவ விரிவுரையாளர்கள் பணி நியமனம் செய்ய பெற்றனர். உயிரறிவியல் துறையில் திருமதி.எம்.அருள்ஜோதி, பொருளறிவியல் துறையில் திரு.ம.ரமேஷ், ஆங்கிலத்துறையில் திருமதி. தேன்மொழி மற்றும் வரலாற்றுத்துறையில் திருமதி.மணிமேகலை ஆகியோர் கௌரவ விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் ஆணையின்படி வெளிமுகமை மூலம் துப்புறவுப் பணியாளராக திரு.எல்.நாகலிங்கம் அவர்கள் இக்கல்லூரியில் மதிப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.



Scanned with CamScanner

பணிஓய்வு

கல்வியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் திருமதி அ.தேவகி அவர்கள் இக்கல்வியாண்டில் ஓய்வு பெறுகிறார். அவரது பணி ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய அன்புடன் வாழ்த்துகிறோம்.

அரசு விழாக்கள்

இக்கல்லூரி வளாகத்தில் 05-09-2015இல் ஆசிரியர் தினவிழா, 15-08-2015இல் சுதந்திர தினவிழா, 26-01-2016இல் குடியரசு தினவிழா மற்றும் 08-03-2016இல் மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் முதல்வர், பேராசிரியர்கள், கல்லூரி நூலகர், மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நிதிஒதுக்கீடு மற்றும் கல்வி உதவித்தொகை விபரம்

இக்கல்வியாண்டில் பி.எட் முதலாமாண்டு மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு ரூ.3,45,065/- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு ரூ.2,00,075/- பெற்று வழங்கப்பட்டது.

மாநில உயர்கல்வி மன்றம் *TANSCHE* உதவியுடன் ரூசா –*RUSA* அமைப்பின் மூலம் இக்கல்லூரிக்கு முதல் தவணையான ரூ.25,00,000/- இக்கல்வியாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் தொகையில் புதிய கணினி ஆய்வகம், மற்றும் ஆய்வக தளவாடங்கள், ஜெனரேட்டர், முதல்வர் அறைக்கு குளிர் சாதன கருவி, வளாகம் முழுமைக்கும் *CCTV* காமிரா அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் மிசின், மற்றும் ரோஸ்ட்ரம் போடியம் (ஒலிபெருக்கி மேடை) கல்லூரிக்கு தேவையான முக்கிய பொருட்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இதர செயல்பாடுகள்

முனைவர் திருமதி வெ.கலைச்செல்வி அவர்கள் ரூசா ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வருகிறார். இவர் சென்னை தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் பட்டபடிப்பு பாடத்திட்டக்குழு உறுப்பினராக உள்ளார். சேலம் சாரதா பெண்கள் கல்வியியல் கல்லூரியில் பாடத்திட்டக்குழு உறுப்பினராக உள்ளார். மேலும், கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் செயற்குழு உறுப்பினராகவும், மாநில கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் தமிழ் பட்டயக்கல்வி பாடத் திட்ட உறுப்பினராகவும் உள்ளார்.

இக்கல்லூரியின் கணித உதவிப்பேராசிரியர் திரு.ஜெ.நவநீத கிருஷ்ணன் *RIE* மைசூர் நடத்திய தேசிய கல்வித்திட்டம் ஆலோசனைக் கூட்டத்தில் ஆகஸ்ட் 2015 அன்று கலந்து கொண்டார்.

07-01-2016 முதல் 09-01-2016 வரை, இக்கல்லூரியின் கல்வியியில் உதவிப் பேராசிரியர் முனைவர் வெ.மனோகரன் அவர்கள் தமிழக அரசு இடைநிலைக்கல்வி கல்வித்திட்டத்தின் முதுகலைத் தமிழாசிரியர்களுக்கு மாநில அளவில் பயிற்சி பெற்று, மாவட்ட அளவில் சுமார் 150 முதுகலைத் தமிழாசிரியர்களுக்கு புதிய உத்திகளைப் பயன்படுத்தி பாடம் கற்பிப்பது பற்றி பயிற்சி அளித்தார். *RIE* மைசூரில் 04-02-2016 முதல் 05-02-2016 முடிய *NCERT* சார்பில் நடைபெற்ற இந்திய மற்றும் மண்டல அளவிலான கருந்தரங்கில் கலந்து கொண்டு பயிற்சி சார்பான கருத்துக்களை எடுத்து விளக்கியுள்ளார். இவர் மேலும் இக்கல்லூரியின் விளையாட்டுத் துறையின் பொறுப்பு ஆசிரியராக இருந்து, கௌரவ விரிவுரையாளர்கள் துணையுடன் மாணவ, மாணவியர்கள் ஒத்துழைப்புடன் 18-05-2016 முதல் 24-05-2016 முடிய பல்வேறு



Scanned with CamScanner

விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக நடத்ததியுள்ளார். வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெற்றோர் ஆசிரியர் கழக செயல்பாடுகள்

இக்கல்வியாண்டில் 23-01-2016இல் பெற்றோர் ஆசிரியர் பொதுக்குழுக் கூட்டம் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். பெற்றோர், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் 2015-16ஆம் ஆண்டிற்குரிய புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக முதல்வர் முனைவர் எஸ்.ராஜேந்திரன் அவர்களும் , துணைத்தலைவர்களாக முனைவர் திருமதி வெ.கலைச்செல்வி மற்றும் திரு.பி.வி.மதிவாணன் அவர்களும் செயலாளராக திரு.ஆர்.சண்முகம் அவர்களும், இணைச்செயலாளர்களாக பேராசிரியர் முனைவர்.வெ.மனோகரன் மற்றும் திருமதி.ஆர்.வெள்ளியங்கிரி அவர்களும், பொருளாளராக பேராசிரியர் ஜெ.நவநீதகிருஷ்ணன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி நூலகம்:

2015-16ஆம் கல்வியாண்டில் நூலகத்திற்கு ரூ 10,000/- அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 57 புத்தகங்கள் வாங்கப்பட்டன. *Edn Tracks, Carrier 125,* ஜேர்னல் ஆப் இந்தியன் எஜிகேசன், என்.சி.ஆர்.டி பப்ளிகேஷன், தமிழரசு, தி இந்து மற்றும் எம்ளாய்மென்ட் நியூஸ் ஆகிய புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் எம்ளாய்மென்ட் நியூஸ் பத்திரிக்கை கல்லூரி நூலகர் திரு ச.மணிவண்ணன் அவர்கள் தனது செலவில் நூலகத்திற்கு அளித்துள்ளார்.

பி.எட் முதல் ஆண்டு மாணவ,மாணவிகள் , கல்லூரி நூலகத்தின் முற்றிலும் திறந்த முறை *(Open Access System)* மற்றும் நூலக இணையதளம் ஆகியவற்றை முழுவதும் பயன்படுத்தி வருகின்றனர். கல்லூரி நூலகத்தில் மொத்தம் 14559 புத்தகங்கள் உள்ளன. கல்லூரி நூலகத்தில் மாணவர்களால் சுமார் 4000 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டன. பார்வை புத்தகங்கள் அனைவரும் பயன்படும் வகையில் அமைந்துள்ளன.

பாடி வாழ்க்கை முகாம்

இக்கல்வியாண்டில் பாடி வாழ்க்கை முகாம் 01-12-2015 முதல் 05-12-2015 முடிய ஐந்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. முகாம் அலுவலராக பேரா.ஜெ.நவநீதகிருஷ்ணன்,(கணிதம்) பெறுப்பேற்று சிறப்பாக நடத்தினார். முதல்நாள் தொடக்கவிழாவில் கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமை தாங்க, சேலம் சாரதா கல்வியியல் கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் திருமதி.பி.நாகவல்லி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். இரண்டாம் நாள் நிகழ்வில் டாக்டர் திரு.குகப்பிரியா வாசுதேவன் அவர்களும், மூன்றாம் நாள் நிகழ்வில் திரு.ஆ.பார்திபன் அவர்களும், நான்காம் நாள் நிகழ்வில் பெரியார் பல்கலைக்கழகத்தின் நூலகத்துறையின் உதவிப்பேராசிரியராக பணிபுரியும் முனைவர் எம்.ஜெயபிரகாஷ் அவர்களும் கலந்து கொண்டனர். முகாம் நிறைவு நாள் விழாவில் பெரியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் மா.மணிவண்ணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். முகாமை சிறப்பாக நடத்திய அனைத்து பேராசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.



Scanned with CamScanner

விடுதி

இக்கல்வியாண்டில் கல்லூரி விடுதியில் 36 மாணவர்களும், 37 மாணவியர்களும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து தங்கி பயில்கின்றனர். விடுதியின் காப்பாளாரக முதல்வர் முனைவர் திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் உள்ளார். துணைக் காப்பாளராக பேரா.திரு.ஜெ.நவநீதகிருஷ்ணன் உள்ளார். மாணவியர்களுக்கான விடுதியில் பயிற்றுநராக இக்கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் திருமதி.வெ.கலைச்செல்வி அவர்கள் உள்ளார். இவ்விடுதியில் குறைந்த செலவில் நிறைவான வகையில் "செலவை பகிர்தல்" முறையில் உணவு வழங்கப்படுகிறது. விடுதியின் சமையலர் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் என் பாரட்டுதலையும், நன்றியையம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

2015-16ஆம் கல்வியாண்டில் *YRC* திட்ட ஒருங்கிணப்பாளர் திரு.ச.மணிவண்ணன், அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாணவ, மாணவியர்கள் கீழ்காணும் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

1) பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தினை பின்பற்றி, மாணவர்கள் கல்லூரி வளாகத்தினை மிகவும் தூய்மையாகப் பராமரித்தனர்.

2) 29-03-2016 அன்று நடைபெற்ற பெண் சிசு கொலை தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை கல்லூரி முதல்வர் முனைவர் திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார். குமாரபாளையம் அரசு தலைமை மருத்துவர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

3) 12-04-2016 அன்ற கல்லூரியில் காசநோய் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நாமக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனை காசநோய் பிரிவு இயக்குநர் முன்னிலை வகிக்க, முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதில் காசநோய் குறித்த விழிப்புணர்வு, சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு உதவிட வேண்டும் என்பது குறித்த விளக்கங்கள் தரப்பட்டன.

4) 9-04-2016 அன்று சென்னை *SEBI- Securities & Exchange Board of India* சார்பாக, "இளம் முதலீட்டாளர்களுக்கான நிதியின் பாதை" குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. திருச்சி *NIT* தேசிய தொழிட்நுட்ப கழக பேராசிரியர் முனைவர் ஜெ.அலக்ஸாண்டர் அவர்கள் நுட்ப உரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் தலைமை ஏற்று பங்கு சந்தை சேமிப்பு பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

மாணவ, மாணவியர்கள் மரக்கன்றுகள் நடுதல், அவற்றை பராமரித்தல் போன்ற பணிகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றது எண்ணிபெருமகிழ்வு கொள்கிறேன். இதில் பங்கேற்ற போராசிரியர்கள், கல்லூரி இணை நூலகர், கௌரவ விரிவுரையாளர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முப்பெரும் விழா

இக்கல்வியாண்டில் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா, விளையாட்டு விழா, ஆண்டு விழா ஆகிய முப்பெறும் விழா 27-05-2016 இன்று நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் முதல்வர் தலைமையேற்க சிறப்பு விருந்தினர் சேலம் அம்மாபேட்டை முனிசிபல் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குநர் ஜி.முருகேசன் அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்க உள்ளார். மேலும், ஆண்டு விழா சிறக்க பணியாற்றிய பேராசிரியர்கள், கல்லூரி இணை நூலகர், கௌரவ விரிவுரையாளர்கள், ஆசிரியரல்லா பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு இக்கல்லூரியின் சார்பில் என் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



Scanned with CamScanner

## ஆசிரியர்களுக்கு மேதகு. **A.P.J. அப்துல்கலாம்** அவர்களின் அறிவுரைகள்

1. ஆசிரியராக இருக்கும் நான் ஆசிரியர் பணியை நேசிப்பேன்
2. ஆசிரியர் பணியே என் ஆன்மாவாக இருக்கும்
3. ஆசிரியர் பணியில் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவை செய்வேன்.
4. சராசரி திறமை கொண்ட மாணவரை மிகச் சிறந்த மாணவராக முன்னேற்றினால் தான் என்னை ஒரு சிறந்த ஆசிரியராக நான் கருதுவேன்.
5. என் வாழ்க்கையே என் மாணவர்களுக்கு அறிவுரையாக இருக்கும் வகையில் என் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்க விதிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவேன்.
6. சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்கும் ஆர்வத்தை குழந்தைகள் மற்றும் மாணவர்களிடம் வளர்ப்பேன். இதன்மூலம் அவர்களை சுயசிந்தனை கொண்ட அறிவு பலம் நிறைந்த நல்ல குடிமக்களாக உருவாக்குவேன்.
7. எல்லா மாணவர்களையும் சமமாக நடத்துவேன். மதம், இனம்,மொழி அடிப்படையிலான எந்த பாகுபாட்டையும் ஆதரிக்கமாட்டேன்.
8. மாணவருக்கு தரமான கல்வியை வழங்கும் வகையில் என் திறமைகளை வளர்த்து கொள்வேன்.
9. சிறந்த சிந்தனைகள் என் மனதில் எப்போதும் நிறைந்திருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருப்பேன்.
10. என் மாணவர்களின் வெற்றியை எப்போதும் உற்சாகத்துடன் பாராட்டி கொண்டாடுவேன்.
11. பள்ளி வளாகத்திலும், வெளியிலும், பாலியல் சிந்தனைகளுக்கு இடம்தரமாட்டேன். அப்படிப்பட்ட சிந்தனைகளை வளர்க்கும் எவரையும் ஆதரிக்கமாட்டேன்.

திரு.ச.**மணிவண்ணன்**
கல்லூரி இணை நூலகர்



Scanned with CamScanner

# தமிழ்

தேனினும் இனிய தேன்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழும் தென்மொழியே!
வானினும் வளமுடைய வண்தமிழ் மொழியே
வாழ்வினுக்கு வளம் தரும் வளர் தமிழ் மொழியே
மண்ணினும் மணமுடைய மரபுத் தமிழ் மொழியே
மாந்தருக்கு இரு கண்ணான கன்னித்தமிழ் மொழியே
சொல்லினுக்குச் சுவையான செந்தமிழ் மொழியே
சொல்பவருக்குச் சுகந்தரும் சுகந்தமே
வாழ்க்கைக்கு வளம் தரும் வசந்தமே
சாகா வரம் பெற்ற அமுதமே
தித்திக்கும் தெள்ளமுதே
தெள்ளமுதின் மேலான முக்கனியே என் முத்தமிழே
கல் தோன்றா மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய முத்தமிழே!
தொன்மொழியானதால் செம்மொழி என்று பெயர் பெற்றவளே
மூவேந்தரும் முச்சங்கங்கள் வைத்து வளர்த்த தமிழே
வண்டமிழ்
தண்டமிழ்
ஒண்டமிழ்
இருந்தமிழ்
இன் தமிழ்
செந்தமிழ்
பைந்தமிழ்
சங்கத் தமிழ்
உயர் தமிழ்
என்ன ஆச்சரியம்
இத்தனை அடைமொழிகள் உனக்கு
சாகும் போதும் தமிழ்ப் படித்துச் சாக வேண்டும்
என் சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும் - என்று
அன்று சொன்னான் பாரதிதாசன் ஆனால்
நாங்கள் இன்று சொல்கிறோம்
உடல் மண்ணுக்கு
உயிர் தமிழுக்கு இதை
உரக்கச் சொல்வோம்
உலகுக்கு.

திரு.ச.மணிவண்ணன்
கல்லூரி இணை நூலகர்

**வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!**



Scanned with CamScanner

# யாதுமாகி நின்றாய்

பாரதத்துப் பாட்டுக் கோட்டை
பாரதியே! யாதுமாகி நின்றாய் நீ
எட்டயபுரத்துக் கட்டபொம்மனின்
அடங்காத கோப மூச்சே
கட்டவிழ்த்துப் பாய்ந்து வரும்
காட்டாற்று வெள்ளமே
ஆதிக்க அரக்கனைக்
குத்திக் கிழித்தது–உன்
பாட்டுச் சூலாயுதம்.

அக்னிக்கனைக் கனாக்காரனே
உன் சிதை சாம்பலோடு
நீ கண்ட கனவுகளும்
சாம்பலானது கண்டாயா
நீ பாரதத்தைப் பார்க்க நினைத்தது
ஒரே தேசியம் என்று தானே
ஆனால் பாரதமோ.....?
முப்பத்து இரண்டு மாநிலத்துண்டங்களாகத்
துண்டாடிப் போனதே
நீர் கூட நிறம் மாறுகிறது
எல்லைப் பிரச்சனையால்.....

முண்டாசுக்காரனே
நீ–சுதந்திரம்
பெறுவதற்கு முன்னரே
இறந்ததும் நல்லதாகத்தான் போய்விட்டது.
இல்லையெனில்
உன் முண்டாசு முகத்தை
தேர்தல் சின்னமாக்கி
உன் சுந்தரப் பாடல்களைக்
கொள்கை விளக்கத்துக்கு
கொள்ளை அடித்திருப்பர்
எட்டயபுரம் ஒரு கட்டபொம்மனை
காட்டிக் கொடுத்தது – உன்னைப்
பெற்றெடுத்ததன் மூலம் அது
களங்கம் துடைத்துப்
பெருமிதம் கொண்டது
பெண் என்பவள்
வேண்டும் போது
தொட்டுச் சுவைக்கும்
ஊறுகாய் அல்ல – அவள்
அறிவியல் அறிஞர்களை
சான்றோர்களை
விஞ்ஞானிகளைப் பெற்றெடுத்து
வளர்க்கும் அன்புத்தாய்;
வீரப்பெண்–என்று
கூறியவன் நீயல்லவா.
புத்துலகம் படைக்க வரும்
புதுமைப் பெண்களை வரவேற்று
புரட்சிக்குப் பூபாளம் பாடிய
பாரதத்துப் பீரங்கி நீயல்லவா.
பாரதி – நீ
பிறந்திருக்காவிட்டால்
தமிழ்ப் புதுக்கவிதை உலகம்
கற்பத்திலேயே கரைந்து போயிருக்கும்.
உணர்வுகளை உசுப்பிவிட்டதில்
புரட்சியாளனாய்....
மனங்களைக் கொய்ததில்
காதலனாய்
வருங்காலத்தைச் சொல்லியதில்
தீர்க்க தரிசியாய்
எதுவாய் நீயில்லை
பாரதி நீ " யாதுமாகி நின்றாய்"........

–ஈ.சரண்யா
தமிழ்த்துறை



# அறிந்து கொள்வோம்:–(ஆன்மீகம்)

**1) பஞ்ச கௌவியம்:–**

பால், தயிர், நெய், கோமயம், கோசலம்

**2) பஞ்ச கிருத்தியம்:–**

சிருஷ்டி(படைத்தல்); திதி(காத்தல்); சம்மாரம்(அழித்தல்);
திரோபவம்(மறைத்தல்); அநுக்கிரகம்(அருளல்)

**3) பஞ்ச தரு:–**

கற்பகம்; சந்தானம்; அரிச்சந்தம்;மந்தாரம்; பாரிசாதம்

**4) பஞ்ச கருவிகள்:–**

தோற்கருவி; துளைக்கருவி; நரம்புக்கருவி; கஞ்சக்கருவி;பிடற்றுக்கருவி.

**5) பஞ்ச சபைகள்:–**

1) திருவாலங்காடு – இரத்தின சபை
2) சிதம்பரம் – பொற்சபை
3) மதுரை – வெள்ளியம்பலம்
4) திருநெல்வேலி– தாம்பிரசபை
5) குற்றாலம் – சித்திர சபை

**6) பஞ்ச பூதத் தலங்கள்:–**

1. காஞ்சிபுரம்;திருவாரூர் – மண்
2. திருவானைக்காவல் – நீர்
3. திருவண்ணாமலை – நெருப்பு
4. திருக்காளத்தி – காற்று
5. சிதம்பரம் – ஆகாயம்

**7) பாக்கியங்கள்:–**

அழகு ; குணம்; ஆயுள்; குலம்; சம்பத்து; வித்தை விவேகம்; தனம்.

**8) கோயில் வகைகள்:–**

1. பெருங்கோயில்
2. கரக்கோயில்
3. ஞாழற்கோயில்
4. குடிக்கோயில்
5. இளங்கோயில்
6. ஆலக்கோயில்
7. மாடக்கோயில்

**9) லிங்க வகைகள்:–**

1. சுயம்பு லிங்கம் – தானாக வந்தது
2. தேவிக லிங்கம் – அம்பிகை வழிபட்டது
3. திவ்ய லிங்கம் – தேவர்கள் வழிபட்டது
4. மானுட லிங்கம் – மனிதர்கள் வழிபட்டது
5. ஆர்ஷிக லிங்கம் – ரிஷிகள் வழிபட்டது
6. ராட்சச லிங்கம் – அசுரர்கள் வழிபட்டது

**10) ஒன்பது வகை பக்தி:–**

1. சிரவணம் – இறைவனின் குணங்களைக் காதாரக் கேட்டல்
2. கீர்த்தனம் – இறைவனின் குணங்களை வாயாரப் பாடுதல்
3. ஸ்ரமணம் – தியானித்தல்
4. பாதசேவணா – திருவுருவத்தை பூசித்தல்



Scanned with CamScanner

5. அர்ச்சனா – பூக்களாலும்; இலைகளாலும் அர்ச்சித்தல்

6. வந்தனம் – திருவடியை விழுந்து வணங்குதல்

7. தாஸ்யம் – பகவானுக்கு தன்னை அடிமையாக்குதல்

8. சக்யம் – பகவானை தன் உற்ற நண்பனாக்குதல்

9. ஆத்ம நிவேதனம் – பகவானுக்குத் தன்னை முழுமையாக சமர்ப்பித்தல்

## 11) சப்த ரிஷிகள்:–

1. கௌதமர்
2. பரத்வாஜர்
3. விசுவாமித்திரர்
4. ஜமதக்கினி
5. வசிஷ்டர்
6. காசிபர்
7. அத்திரி

## 12) சப்த ஸ்வரங்கள்:–

1. குரல்
2. துத்தம்
3. கைக்கிளை
4. உழை
5. கிளி
6. விளரி
7. தாளம்

## 13) ஏழுவகைத் தாளங்கள்:–

1. துருவம்
2. மட்டியம்
3. ரூபகம்
4. சம்பை
5. திரிபுடை
6. ஹடதாளம்
7. ஏகதாளம்

## 14) ஒன்பான் சுவை:–

1. இன்பம்
2. நகை
3. கருணை
4. கோபம்
5. வீரம்
6. பயம்
7. அருவருப்பு
8. அற்புதம்
9. சாந்தம்

## 15) பயனில்லா ஏழு:–

ஆபத்துக்குதவா – பிள்ளை

அரும்பசிக்குதவா – அன்னம்

தாகத்தைத்தீராத் – தண்ணீர்

தரித்திரம் அறியாய் – பெண்டிர்

கோபத்தை அடக்கா – வேந்தன்

குருமொழி கேளாச் – சீடன்

பாவத்தைத் தீராத் – தீர்த்தம்



Scanned with CamScanner

## வரவில்லை

உதிரம் கொட்டி
உயிரைக் கொடுத்து
உருவம் கொடுத்தாள்
எனது
ஆடைகளை அழுக்கற்றியும்
என்னை
அழகுபடுத்தியும் பார்த்தாள்
அப்போது வடித்த
சுடு சோற்றினை
எனக்கு கொடுத்துவிட்டு
பழைய கஞ்சியினை
தன் உணவாக்கினாள்
இருந்த
ஒரு போர்வையையும்
என்னுடல் போர்த்திவிட்டு
அவள் சேலையையே
போர்வையாக்கிக் கொண்டாள்
எனக்காகவே
உயிர் வாழும் அவள் மீது
வரவில்லை இந்த
பாழாய்ப் போன காதல்
முகவரி கூட தெரியாத
எவளோ ஒருத்தி மீது
முகம் பார்த்தவுடன் வருகிறதே !!!!

-ஈ.சரண்யா
தமிழ்த்துறை

## நூலகம்

நூலகம் சென்றேன்
என் காதலியைக் கண்டேன்.
அவள் பெயர் "புத்தகம்"
பல புத்தகப் பெண்கள் அட்டையின்றி
அங்கே துகிலுரியப்பட்டிருந்தனர்.
இந்த இழிநிலை கண்டு வருந்தினேன்.
திருமணம் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப் படுகிறது!
எனது திருமணம்
நூலகத்தில் நிச்சயிக்கப்பட்டது.
நூலகர் எங்கள் திருமணத்தைப்
பதிவு செய்தார் அன்புடன்!
எங்கள் இல்லற வாழ்வில்
இரு செல்வங்கள் பிறந்தன.
முதல் குழந்தை "அறிவு"
இரண்டாவது குழந்தை "ஞானம்"
அறிவு உண்மையிலேயே
ஒரு குழந்தை தான் – அதனால் தான்
"அறிவை வளர்" என்கிறார்கள்
"அறிவின் பசிக்கு" – என்
புத்தக மனைவி பாலூட்டுகிறாள்.
அளவோடு இரு குழந்தைகள் போதும் என்றேன்!
ஆதலால் நண்பர்களே!
நூலகம் செல்க!
புத்தகப் பெண்களுக்கு வாழ்வு கொடுத்து
வாழ்வைப் பெறுக!

-ப.இராமன்
பி.எட்.முதலாமாண்டு தமிழ்த்துறை
அரசு கல்வியியல் கல்லூரி
குமாரபாளையம்.



Scanned with CamScanner

## மங்கையின் மன(ண) ஆசை!

நாம் இருவரும் இருவருக்கு
ஒருவராய் உறவானோம்!
வரதட்சனை கொடுப்பவன் இளிச்சவாயன்!
வாங்குபவன் மானங்கெட்டவன்
என் அப்பா இளிச்சவாயனாக இருக்க விரும்பவில்லை!
என் மணாளன் மானங்கெட்டவனாக இருக்க ஆசைபடவில்லை!
நீ இராமனாக இருக்க வேண்டாம்
ஏனென்றால்?
அவன் தன் மனைவியை காக்கத் தவறியவன்!
இராவணன் பிறர் மனைவியை நாடியவன்!
இருவரும் மனைவியின் மறுமொழியை
கேக்கத் தவறிய அயோக்கியர்கள்!
அரிச்சந்திரனாக இருக்க வேண்டாம்!
மனைவியை உயிருடன் சிதையில் விட்டுச் சென்றவன்!
மலையை பிளக்கும் மாவீரனாக இருக்க வேண்டாம்!
மதனத்தை தூண்டும் மன்மதனாக இருக்க வேண்டாம்!
அறிவியலை ஆராயும் ஆராய்ச்சியாளனாகவும் இருக்க வேண்டாம்!
நீ நீயாகவே இரு!
நான் நானாகவே இருக்கின்றேன்! – ஆனால்
நம் புரிதல் புரியாமல் பிரிந்தவர்களுக்கும் புரிய வேண்டும்!
நீருக்குள் மூழ்கினால் நெருப்பு அணைந்துவிடும்!
ஊடலில் ஊற்றெடுத்தால் வாழ்க்கை அணைந்துவிடும்!
ஊடலும் உறங்கட்டும்!
உறங்கிய ஊடலும் நம்மிடைய உறவாடட்டும்!
நகை வேண்டுமென்று நச்சரிக்க மாட்டேன்!
காரில்தான் போவெனென்று கதற விட மாட்டேன்!
பைக்கில்தான் போவெனென்று பதற விட மாட்டேன்!
நான் தனிமையில் நடந்தால் கூட – நீ
என் நினைவுடன் நின்றால் போதும்!
உன் அன்பு அட்சயபாத்திரமாக இருக்க வேண்டும்!
உன் கோபம் நான் ஏந்தும்
பிச்சைப் பாத்திரமாக இருக்க வேண்டும்!
அசையா சொத்தாய் உன் மனம் இருக்க வேண்டும்.
உன் அன்பிற்கு மட்டுமே அசையும்
சொத்தாய் என் மனம் இருக்க வேண்டும்!
உயிராக நீயும் உடலாக நானும் வேண்டாம்!
உயிர்மெய்யாக நாம் இருப்போம்!
இவ்வளவும் எதிர்பார்த்து ஏமாறுவதற்கு
நான் ஏமாளி அல்ல!
நீ என்னை ஏமாற்றாத வரையில்!

## இன்னும் ஒரு முறை

வியாசர் சொல்ல விநாயகர் எழுதிய
மகாபாரதம் அல்ல!
இது என் இந்திய பாரதம்!
என் இந்திய பாரதத்திற்கு
இன்னும் ஒருமுறை சுதந்திரம் வேணடும்!
ஊழல் அரசியலுக்கு சுதந்திரம் வேணடும்!
திங்கள் ஒளியில் மங்கை
உலா வர சுதந்திரம் வேணடும்!
இல்லாதவனிடம் இருப்பவன் இல்லை என
கூறும் கூற்றிற்கு விடுதலை வேண்டும்!
முடங்கியிருக்கும் திறமைக்கும்
திறமையற்றவனின் பதவிக்கும் விடுதலை வேண்டும்!
காசுக்கு கண்ணாடிக்கும் விருதுகளுக்கு
விடுதலை வேண்டும்!
பசி ஓலத்திற்கு விடுதலை வேண்டும்!
மதம் – ஜாதி மறக்க மனிதனின்
மனதிற்கு சுதந்திரம் வேணடும்!
இன்னும் ஒரே ஒரு முறை சுதந்திரம் வேணடும்!
சுதந்திரமாய் வாழ்வதற்கு!





Scanned with CamScanner

## என் பார்வையில்

ஆண்கள் அழகுதான் என் பார்வையில்!
அம்மாவை அம்மாவாக பார்க்கும் மகன் அழகு!
மனைவியை தாயாக பார்க்காத கணவன் அழகு!
மகளை தாயாக பார்க்கும் அப்பா அழகு!
கம்பீரமீசையை கடனுக்கு கொடுத்துவிட்டு
குழந்தைக்கு கொடுக்கும் அப்பாவின் முதல் முத்தம் அழகு!
மகள் திருமணத்திற்கு பிறகு மறைவாக அழும்
அப்பாவின் அன்புள்ளம் அழகு!
சகோதரியை காக்கும் தமையன் அழகு!
தன் மனைவியை இரசிக்கும் கணவன் அழகு!
பிறர் மனைவியை பாராமல் இருத்தல் அதிலும் அழகு!
மனைவியின் பிரசவத்தின் போது வேதனைபடும் கணவன் அழகு!
தன் குழந்தையை பாராமல் மறுஜென்ம
மனைவியை பார்க்கும் கணவனின் முதல் பார்வை அழகு!
தோழியையும் தோழனாக பார்க்கும் என் நண்பன் அழகு!
குடும்பத்திற்காக வாழும் ஒவ்வொரு ஆண்மகனும் அழகே!
நாட்டிற்காக தன்னை அர்ப்பணிக்கும் ஆண் அதிலும் பேரழகு!
அழகை இரசித்து அழகாக பார்த்துக் கொள்ளும்
ஆண்கள் ஐதுவின் சிம்மாசானம்!



## அதிர்ஷ்டம்

தாலாட்டு பாடிய அன்னையே
எனக்கு ஒப்பாரி பாடினால்
நானும் அதிர்ஷ்டசாலிதான்!

**அடங்கா அறிவிலி**

கேட்டு அறிந்தவனை விட
கெட்டு அழிந்தவனே
அறிவாளி!

## 2020 ல் இந்தியா ?

விவசாயம் விஞ்ஞானம் ஆக்கப்படும்!
ஆயுதகிடங்கே அடுப்பறை ஆக்கப்படும்!
நிலைிற்கே சென்று சாப்பிடுவோம் – ஆனால்
சோற்றைதான் அங்கேயும் தேடுவோம்!
அன்பின் சுவடும்
ஆராய்ச்சியின் ஊற்றாக இருக்கும்!
உயிரும் உறவும் உறவாடா நிலை!
தாயின் கருவறை குழந்தை நாமே இறுதி!
குடுவை குழந்தையே இனி உறுதி!
சோறும் நீரும் காட்சியமாக காட்சியளிக்கப்படும்!
போரும் களமும் பங்காளியாக உறவாடும்!
மாரியம்மன் பண்டிகையும்
மாமன் மகன்(ள்) உறவும்
மஞ்சள் நீர் விளையாட்டும் வரலாறாக படிப்பர்!
அரசியலும் அரவமற்று போகும்!
watsapp - FB குலதெய்வம் ஆகும்!
இணையதளமே இதயதளத்தில்
உறவாடும் நிலை!
மனிதன் மனிதனாக இல்லாமல்
மாதிரி ஆக இருப்பான்!



–மோகனா.மா
தமிழ்துறை



Scanned with CamScanner

## பாடல்
## இளைஞர் எழுச்சி திறன்

**பல்லவி**

எங்கள் தலைவர் திரு கலாம்;
நேர்மை நிறைந்த கலாம்;
இன்று இளைஞர் எழுச்சி நாள் விழாவாம்
*Happy birth day to you*
பிறந்த நாள் வாழ்த்துமக்கே
*Happy birth day to you*
பிறந்த நாள் வாழ்த்துமக்கே

(எங்கள் தலைவர்..... )

**சரணம் 1:**

நீர் அறிவியலின் தந்தை
அது பாரெல்லாம்
பல புதுமை படைத்து விட்டீர்
அதை எம்மை அறிய செய்து விட்டீர்
உமது பிறந்த நாளை
எமது நாளாக்கினீரே (எங்கள் தலைவர்..... )

**சரணம் 2:**

நீர் மாணவரின் தெய்வம்
இது நாம் அறிந்த உண்மை கீதம்
மாந்தருள் மாணிக்கம்
நாட்டின் பல திட்டம் தந்த சிங்கம்
உமது பிறந்த நாளை
எமது நாளாக்கினீரே (எங்கள் தலைவர்..... )

**சரணம் 3:**

நீர் ஆசியாவின் ஜோதி
அது பாரெல்லாம் போற்றும் செய்தி
நீர் அமரராகி விட்டீர்
எம்மை தவிக்க சென்று விட்டீர்
உமது பிறந்த நாளை
இளைஞர் நாளாக்கினீரே (எங்கள் தலைவர்..... )

—பா.சோலைக்குமார்
பி.எட், ஆங்கிலம்.



Scanned with CamScanner

# சுதந்திர குமுறல்

சுதந்திரம் எங்கே இருந்தது இந்த வார்த்தை?
மண் வாசனையின் மரபு அடிமையெனும் பசிக்கு இரையாகுமோ என
தன் இரத்தத்தை பலியாக்கி உயிர்நீர்த்து - மனிதவளம் வளர விட்டுச்சென்றனர் -
துப்பாக்கிக்கும் தூக்குமேடைக்கும்
அஞ்சா எம் தியாகச் சுடர்கள்!
வண்ணம் தீட்டி விளையாடும் எம் இளவீரன் - போர்களத்தில்
வண்ணம் தீட்டினான் வாளால்!
அடுப்பங்கரையை பக்குவம் பார்த்த எம் பெண்களின் - கண்கள்
துரோகியின் தோல்வியை படித்தன!
தென்னகத்தை குதிரையில் உலாவந்தபடியே - சமத்துவ போர்புரிந்து
வென்றான் எம் தீரன் சின்னமலையான்!
வந்தாரை வாழ்வைக்கும் எம் குலவழக்கம் - அடிமையாக்க
வந்தாரை கருவறுத்த வீரமுழக்கம்!
யோசித்துப்பார்............
நாட்டுவளம் கூர்மையடைய மனித எண்ணம் கூர்மழுங்கி போனது!
நவீனமனிதன் சுயநலசுதந்திரத்தை கற்றான் - ஆனால்
பொதுநல சுதந்திரத்தை படிக்கக்கூட மறந்தான்!
பசிக்கு அழும் குழந்தையை பசியாற்ற இயலவில்லையே
என ஏங்கியப்படியே மாண்டாள் தமிழ்ச்சி!
தாயின் முகத்தை பார்த்தபடி எந்நொடியோ என
பிணக்குவியலோடு சாவை எண்ணின
மழலை பேசும் பிஞ்சின் கண்களில் - அன்றோ
சதி விளையாடியது;
அகதிகள் என்ற பெயரில் தமிழினம் - இனவெறியரின்
பீரங்கிகளுக்கு இரையாயின;
வீரம் மட்டும் பேசும் போரில் தமிழ்ச்சியின் மானம் பேசியது;
மனித உரு விலங்குகளிடம்!
அச்சமயமோ தியாகிகளின் வாரிசான நாம் பாரம்பரிய
விளையாட்டை மறந்து IPL - யை கொண்டாடினோம்
பொறும்புள்ளவரின் வாயில் மனித நேயம் விளையாடியது
தகவல்பரிமாறும் கோப்புகளில் மட்டும்;
ஐயோ பாவம் - மனிதநேயம் என்ற வார்த்தை
மனித நேயமற்று போயிற்று;
அங்கோ சீனப்பெண் கலைச்செல்வி - யானால்
இங்கோ - தமிழ்மனம் வாசம் அற்று போயிற்று!
மாணவனே........ வருங்கால இளைஞனே.......!
சுதந்திரம் பழகு என்றார் பாரதி
கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் செய்தார் காந்தி
ஒற்றுமைபட்டும் நாடாண்டான் அலெக்சாண்டர்!
எளிமையையும், நேர்மையையும் ஆண்டவர்
கர்ம வீரர் காமராசர்!
மனமே...............
தமிழை மூச்சாகவும்!
தமிழன் என்ற சொல்லை செயலாகவும்-கொண்டு
தெளிந்த நல்லறிவுடன் உலகாள்வாய்!!!





Scanned with CamScanner

## கண்தானம்




நான் மறைந்த பின்னும் இவ்வுலகை ரசிப்பேன்!
மண்ணில் மக்கும் கண்ணை உரமாக
தந்தேன்! – என் பசுமை உலகைக் காண!!!

## மனித நேயம்



பரிதாபத்திற்கு சுதந்திரம் இல்லை – இங்கே?
பாவம் பகுத்தறிவின் விதி பிறழ்ந்து போனது
பொதுநோக்கில்லா மனிதர்களிடையே?
புண்ணியம் செய்யக் கோரி பாவத்திடம்
அனுதாபம் கேட்டது – எதிர்காலம்.
என்னக் கொடுமை மனங்களிடையே
இதுவா நவீனம்?

## இளைஞர்களின் காலம்




அலைபேசி என்னும் வங்கியில்
மாணவன் சேமிப்பது – எண்களால்
ஆன பணத்தை!
கடன் வாங்குவது – எண்ணிலடங்கா
காலத்தை!
செலவழிப்பது – இளமையின் அற்புதத்திறமைகளை!

## காதலின் தண்டனை

காதலே!
உன்னைச் சாக்காக வைத்து
உன் பெயரில் மோசம் செய்பவர்களுக்கு
நீ கொடுக்கும் தண்டனையா எய்ட்ஸ்!

## மனம்



கனவுகளை பட்டியலிட்டேன் – வரிசையோ
நூற்றாண்டை எட்டின!
இவையனைத்தும் கண்கள் தாங்குமெனில் – மனம்மட்டும்
ஏன் உடைகின்றன தடைக்கண்டு?

## அரசியல்



எந்நேரமும் நேர்மை – நேற்று
சந்தர்ப்பத்திற்கு மட்டும் நேர்மை – இன்று
நேரமில்லை நேர்மைக்கு – நாளை



# அரசு கல்வியியல் கல்லூரி

# குமாரபாளையம்

**61 – வது ஆண்டுவிழா கட்டுரைப் போட்டி**

பெயர் : கு.வள்ளி

சுழல் எண் : 67

தேதி : 23.05.2016

## ஆசிரியர் பணியில் நூலகத்தின் பங்கு

**குறிப்புச் சட்டகம்:**

- முன்னுரை
- நூலகத்தின் அமைவிடம்
- நூலகரின் முக்கியத்துவம்
- ஆசிரியர் பணியில் நூலகம்
- நூல்களைத் தேர்ந்தெடுக்கும் முறை
- மாணவர்களை ஊக்குவித்தல்
- டிஜிட்டல் நூலகம்
- டிஜிட்டல் நூலகத்தின் சிறப்பியல்புகள்
- இ - கற்றல்
- இந்தியாவில் டிஜிட்டல் நூலகம்
- நூலகத்தின் பயன்கள்
- முடிவுரை



***முன்னுரை:***

ஒரு பள்ளி அல்லது கல்லூரியில் நூலகம் மிகவும் இன்றியமையாதது ஆகும். பணிகளில் ஆசிரியர் பணியை நாம் ஒரு கலை என்றே கூற வேண்டும். மாணவர்களை ஒரு நல்ல குடிமகனாக உருவாக்குவது ஆசிரியர் கையில் தான் உள்ளது.

**ஆசிரியருக்கே ஆசிரியர் நூலகம்**

அப்படிப்பட்ட நூலகம், ஆசிரியர் பணியில் எவ்வகையில் உதவியாய் இருந்து அவர்களுக்கு தேவையான பணிகளை செய்கிறது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

***நூலகத்தின் அமைவிடம்:***

நூலகமானது வகுப்பறைகளுக்கு நடுவில் அமைய வேண்டும். நூலகம் நல்ல வெளிச்சமான, காற்றோட்டம் உள்ள பகுதியில் இருப்பது நலம். நூலகம் கவர்ச்சிகரமாக, வசீகரத்துடன் மாணவர்களையும், ஆசிரியர்களையும் கவர்ந்திழுப்பதாக அமைய வேண்டும்.

***நூலகரின் முக்கியத்துவம்:–***

நூலகத்தில் நல்ல, பொறுப்பு மிகுந்த நூலகர் பணியில் இருக்க வேண்டும்.





ஒரு நல்ல நூலகர் இல்லையெனில்,
வெறும் வெறும் கட்டடங்களும்,
வெறும் வெறும் நூலகங்களும்,
இருந்தும் பயனில்லை.

R.K.- தொகு.

தலைமை நூலகருக்கு கீழ் உதவி நூலகர் இருப்பார். அவரும் தம் பணியை செவ்வனே ஆற்ற வேண்டும்.



Scanned with CamScanner

### ஆசிரியர் பணியில் நூலகம்:-

மாணவர்களுக்கு பாடப்புத்தகத்தில் உள்ள செய்திகளை மட்டுமே கற்பிக்காமல், அது சம்மந்தப்பட்ட நிறைய விஷயங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கு, ஆசிரியருக்கு முதலில் அதைப் பற்றிய ஆழம் இருக்க வேண்டும். அதற்கு நூலகம் மிகவும் துணைபுரிகிறது. நூலகத்தின் மூலம் ஆசிரியர் தன்னுடைய அறிவை மேலும் தீட்டி கூர்மையாக்க முடியும்.

*எரிகின்ற விளக்குதான், மற்ற*
*விளக்குகளை ஏற்றிட இயலும்.*
*-இரவீந்திரநாத் தாகூர்.*



இக்கருத்து ஆசியர்களுக்கு மிகவும் பொருந்தும். அதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் நூலகத்தில் உள்ள நூல்களை நன்முறையில் பயன்படுத்த வேண்டும்.

### நூல்களை தேர்ந்தெடுக்கும் முறை:-

நூல்களை தேர்ந்தெடுக்கும் போது, அவை சமீபத்திய வெளியீடாக இருக்க வேண்டும். அவற்றைப் பற்றிய விவரங்களை நூல்களில் உள்ள அட்டையின் பின்புறம் பார்க்க வேண்டும்.

நூல்களில் மையக்கருத்து பொதிந்துள்ள நூல்களை மட்டும் தேர்ந்தெடுக்காமல், அதற்கான மேற்கோள் நூல்களையும் (Reference Books) நாம் அலசி ஆராய வேண்டும்.

ஆசிரியர்கள் சமீபத்திய ஆய்வுக் கட்டுரைகள், வருட புத்தகம்( **Year Book**) ஆகியவற்றிலும் சிறந்து விளங்க வேண்டும்.

### மாணவர்களை ஊக்கவித்தல்:

ஆசிரியர், தனக்கான சுய சந்தேகங்களுக்காக மட்டும் நூலகத்தை பயன்படுத்தாமல், தன்னிடம் பயிலும் மாணவர்களையும் நூலகத்தில் உள்ள நூல்களைப் பயன்படுத்துமாறு ஊக்கவிக்க வேண்டும். அதற்கு கல்லூரியின் கால அட்டவணையில் பாடவேளையில் நூலகத்தை பயன்படுத்தும் விதம், வாரம் இருமுறை, நூலகப் பாடவேளையை கட்டாயமாக்க வேண்டும்.

பாடப்பொருளில் உள்ள கருத்துகள் மட்டுமே மாணவனை ஒரு நல்ல குடிமகனாக உருவாக்கும் என்று கூற இயலாது. வாழ்க்கையில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கும், சவால்களை எதிர்கொள்வதற்கும் புத்தகத்தை நாம் கையில் எடுக்க அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

நூலகத்தின் அவசியத்தையும், நூல்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து அவர்களின் (மாணவர்களின்) வாழ்வில் ஒளியை ஏற்றிட வேண்டும்.

### டிஜிட்டல் நூலகம்:

நவீன கால கல்வி முறையில், டிஜிட்டல் நூலகம் தன் அபரிவிதமான செயல்களை வழங்கி வருகிறது.




*ஒரு நல்ல சிறந்த நூலகம் என்பது,*
*தன்னகத்தே டிஜிட்டல் நூலகத்தையும் அடக்கியதாகும்.*
*-என். பாலகிருஷ்ணன்*

டிஜிட்டல் நூலகத்தின் மூலமாக, நமக்குத் தேவையான விஷயங்களை எப்போது வேண்டுமானலும், நம் கணினியில் பார்த்தும், படித்தும் கொள்ளலாம். தேவைப்பட்டால் அதனைப் பதிவிறக்கம் செய்தும் கொள்ளலாம்.

### டிஜிட்டல் நூலகத்தின் சிறப்பியல்புகள்:

1) எப்போது வேண்டுமானலும், நமக்குத் தேவையான தகவல்களை பதிவிறக்கம் செய்யலாம்
2) ஸ்மார்ட் போன் மற்றும் இணையதள வசதியே போதுமானது ஆகும்.
3) காலம் விரயமானது தடுக்கப்படும்
4) பொருட்செலவு மிச்சம்.





Scanned with CamScanner

## இ - கற்றல்(E - Learning):

### "E - Learning Electronic Learning"

மின்னியல் வழிக் கற்றலானது பல்வேறு பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது. அவையாவன:

1). இணையம் வழிக் கற்றல்
2). ஒருங்கிணைந்த கற்றல்
3). கலப்புக் கற்றல்
4). தொழில் சார்ந்த கற்றல்
5). வலை வழிக் கற்றல்.



இவற்றை பயன்படுத்தும் முறைகளை, ஆசிரியர் கட்டாயமாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவைகளின் முக்கியத்துவத்தை நாம் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

சாதாரண நூலகத்தின் மூலமாக, நாம் பல செய்திகளை சேகரித்தாலும், டிஜிட்டல் நூலகத்தின் மூலம் வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்களை, உலகின் எந்த மூலையில் இருந்தும் நாம் தெரிந்துக் கொள்ளலாம்.

### இந்தியாவின் டிஜிட்டல் நூலகம்:

முதன்முதலில் 1992ஆம் ஆண்டு, கொல்கத்தாவில் உள்ள நாளந்தா மின்னியல் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவில் மிகப்பெரிய மின்னியல் நூலகம் பெங்களூரில் உள்ளது. இங்கு, தமிழ் மொழியைப் பாதுகாக்கும் விதமாக, பல்வேறு வகையான இலக்கியங்கள், நாவல்கள், கதைப் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன.

தமிழ் ஆசிரியர்கள் ( தமிழ் துறை) இந்நூலகத்தைப் பற்றி கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

### நூலகத்தின் பயன்கள்:

1). நம் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெற நூலகம் அவசியம்.

2). ஆசிரியர்கள் நூலகத்தை நன்கு பயன்படுத்தினால் மட்டுமே சிறப்பான மாணவர்களை உருவாக்க இயலும்.

3). நமக்குத் தெரியாத தகவல்களைப் பற்றி, நாம் யார் உதவியும் இல்லாமல் தெரிந்துக் கொள்ள இயலும்.

4). ஆசிரியர்கள் தன் துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட, நூலகத்தில் உள்ள நூல்கள் பெரும் துணை புரிகின்றன.

**மூடிய கதவுகளைத் திறப்பவர்கள்: ஆசிரியர்கள்;**

5). இப்பொன் மொழிக்கு ஏற்ப மாணவர்களின் அறியாமை என்னும் கதவைத் தட்டித் திறப்பவர்களாக, ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். அதற்கு நூலகமானது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

6). டிஜிட்டல் நூலகத்தின் மூலமாக, ஒரே விதமான தகவல்களை, அனைவரும் ஒரே சமயத்தில் பார்த்து படிக்க இயலும்.

7). நூல்களில் டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களின் அக்னிச் சிறகுகள் விற்பனையில் சாதனை படைத்துள்ளது. விற்பனையில் மட்டுமல்ல மாணவர்களின் மனதிலும் ஒரு தூண்டுகோலாய் இருந்து, அவர்களின் வாழ்வில் முன்னேற வழிகாட்டியாய் அமைந்தது.

### முடிவுரை:

ஒரு ஆசிரியருக்கு, தனக்கு உண்டாகும் சிக்கல்களைத் தீர்ப்பதில் நூலகம் முக்கிய பங்காற்றுகிறது.

மாணவனுக்கு படிக்கும் ஆர்வத்தையும், பழக்கத்தையும் ஏற்படுத்தி, அவனது வாழ்வில் ஒளி வெளிச்சத்தை ஏற்படுத்தும் நிலவாகவும், வாழ்வில் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும், ஆசிரியர் செயலாற்ற, நூலகம் அவசியம்.

படிப்பவன் மாணவன்;

படித்துக்கொண்டே இருப்பவர்

ஆசிரியர்.

நூலகத்தை நன்முறையில் பயன்படுத்தி, ஆசிரியர்களாகிய நாம், நம்முடைய மாணவர்களுக்கு நல்ல வருங்காலத்தை ஏற்படுத்துவோம்.





Scanned with CamScanner

அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம்

61 - ஆம் ஆண்டு நிறைவு விழா

பெயர் : ப. சந்தியாவதி

சுழல் எண் : 32

துறை : ஆங்கிலம்

தேதி : 23 - 05 - 2016

**Synopsis:-**

*Introduction*
*What is Library*
*The Value of Library in Teaching and Learning Process*
*Functions of Library in Teaching*
*Role of Library in Teaching*
*Formal Learning*
*Informal Learning*
*Professional Learning*
*Digital Library*
*conclusion*



**Role of Library in Teaching**

**Introduction:-**

*Library occupies an important place in schools, colleges with its books suited to the interest and aptitude of students. Library is a place which provides and gives knowledge and information with calm, atmospher of neat. Library quiench the thirst of knowledge which students need. It is a place of holy. The role of Library plays an important character to give knowledge through books.*

**LIBRARY IS A HOSPITAL OF MIND.**



**What is Library**

**Roberson (2005) defines:**

**Library is an institution that manages the intellectual product that one can gain access to readily.**

Library is an organised set of resources that includes the intellectual product of media i.e **text, video, hyper media.** Library have physical components includes **film and video, software and electronic** databases, etc. It includes intellectual components like **projector, camera, graphics etc**. A library have an important role in schools and colleges. It includes **books,periodicals, magazines, journels etc.** The placement of library should be take care by librarian.

**" A LIBRARIAN IS A TOUR - GUIDES OF ALL OUR KNOWLEDGE".**

## The value of Library in Teaching & Learning Process.

*" A Library have an important role to play in our future competitiveness in global economy."*

The value of library in our teaching and learning process dependes on the product used by student. The teacher used to give information regarding the content alone. The student required to learn and get additional information with the holp of library. It should give all the needs wanted by student. Not only student, the teacher can gain additional information with the holp of library. By reading books the pupil can learn **vocabulary, idioms phrases, new content etc.** The value of library in teaching shows thier expensive resources.

### Functions of Library in Teaching:-

*" A Library functions as a vital instrument in educational process not as a separate entity isolated from total school programme but involved in teaching and learning process".*

Library enables student to use the leisure time as a useful one.

Library gives student, the information and expensive of **how to use a book.**

Library gives student to learn the information from **known to unknown.**

Library makes student to develop their **silent reading.**

Library act as a teacher by teaching a new content to the student through reading books.

### Role of Library in Teaching:-

Library plays three important roles in teaching and Learning process.

**First Role :-** It serves as a practical role.

**Second Role :-** Library serves as a cultural role.

**Third Role:-** Library serves as as social and intellectual role.



*" A Best Book is equal to Hundred good friends and a good friend is equal to a Library"*

*- A.P.J. Abdul kalam.*

The role of Library shows the importance and needs of teaching. Teaching is not a normal work. A teacher one who moulds a good student can be a good teacher.

**First Role:-**

In first role library serves as a practical role in sharing the expensive resources. A library should include newspaper, magazines, articals, journels, periodicals etc.

*NEWSPAPER IS CIRCULATING LIBRARY WITH HIGH BLOOD PRESSURE".*



Scanned with CamScanner

**Second Role:-**


In second role library serves as a **cultural role** in artifacts and tradition. Library keeps traditional **artifacts** for future use

> *"Library is a place, a practice a tradition which encourages people to become more human that encourage people to become connected to themselves to the larger world".*



**Formal Learning :-**

The student can go to library directly which is presented in school, colleges, institution. The teacher and student can communicate and interact the information get through library directly. The formal learning helps student, teacher to gain more knowledge without any distractions.




**Informal Learning :-**

The student and teacher cannot make their interaction directly within classroom. There is no presence of classroom for communication and interaction. The student cannot gain more than knowledge in this informal learning.

**professional Library:-**

The library helps to give the information regarding **jobs, debates, workshop, interview.** It will holp student according to their profession. This way of learning will bring a new method according to their interest..

> *"Library is the STORE HOUSE of KNOWLEDGE and INFORMATION"*






Scanned with CamScanner

**Digital Library:-**

Digital library includes **projector, camera, computer, graphics etc.** It used to help student through technology. Like video conference, video chat etc. The student can fain information with the help of **INTERNET.**

Now all government college have the connection of internet for the requirement of students need.




Digital library shows the development of information and technology in now a days.

*"A Bad library gives - collections*

*A Good library gives - services*

*A Great library gives - Communities."*

The libraries are friends where a place we can gain knowledge without spending money.

**Conclusion:-**

Library is a holy place people can gain and regret some knowledge which are good and bad. It is place we can learn without any teacher. The role of library in teaching plays a vital character through books, equipment and intellectual product.

*"Support Library*
*Support Readers."*





Scanned with CamScanner